# தமிழகப் பழங்குடிகள்

## வரலாறு சமூகம் பண்பாடு

முதன்மைப் பதிப்பாசிரியர்
முனைவர் ச. அரிச்சந்திரன்

தொகுதி – 2



பதிப்பாசிரியர்
முனைவர் ஆ. சரவணன்

தமிழகப் பழங்குடிகள்; வரலாறு சமூகம் பண்பாடு

(தேசியக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| முதன்மைப் பதிப்பாசிரியர் | : | **முனைவர் ச. அரிச்சந்திரன்** |
| பதிப்பாசிரியர் | : | **முனைவர் ஆ. சரவணன்** |
| பதிப்புரிமை | : | **முனைவர் ச. அரிச்சந்திரன்** |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட், 2018 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641 029. |
| கணினியாக்கம் | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XXVIII + 430 = 458 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 88 - 2**


Tribes of Tamil Nadu ; History Society and Culture


| | | |
|---|---|---|
| Chief Editor | : | **Dr. S. Arichandran** |
| Editor | : | **Dr. A. Saravanan** |
| Copyright's | : | **Dr. S. Arichandran** |
| First Edition | : | August, 2018 |
| Published | : | **Department of Tamil (SF)**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XXVIII + 430 = 458 |
| Prize | : | **Rs. 400/-** |


SUD/

Tel :

102. உத்திரகண்ட் மாநில பழங்குடியினர் நடனங்கள் 670
**ஆ. எஸ்தர் பிரதீபா**

103. திராவிடப் பழங்குடியினர் மொழி பிராகுயி 675
**முனைவர் அ. முபாரக் அலி**

104. சோளகர் தொட்டி 680
**முனைவர் இரா. மணிமேகலை**

105. களப்பணியும் களப்பணியாளரும் 684
**முனைவர் ஆ. சண்முகம் பிள்ளை**

106. Telugu Article - Dr. S. Saratha 694

107. Telugu Article - Prof. K. Anandan 698

108. இந்தியப் பழங்குடி மக்களின் வாழ்வும் தனித்துவமும் 707
**முனைவர். இரா. சசிகலா**

109. கொண்டனூர் இருளர்களின் வாழ்க்கை முறைகள் 711
**திருமதி சுகுணா**

110. இருளர் பழங்குடியினர் வாழ்வியல் 714
**முனைவர் மொ. இரவிக்குமார்**

111. தூமனூர் கரட்டிகா குல இருளர்களின் வாழ்வியல் சடங்குகள் 723
**முனைவர் ச. அரிச்சந்திரன்**

112. முன்னோர் வழிபாட்டு நம்பிக்கை (படுகர்கள் தோடர்கள்) 728
**முனைவர் கோ. சுனில்ஜோகி**

113. நீலகிரியைப் பாதுகாத்த பழங்குடிகள் 734
**முனைவர் செ. துரைமுருகன்**

114. ஆண்டிப்பட்டி வனப்பகுதி மலசர் பழங்குடியினரின் வாழ்வியலில் புறக்காரணிகளின் தாக்கங்கள் 740
**முனைவர் க. முருகேசன்**

115. பழங்குடிகளும் குலக்குறியமும் 747
**முனைவர் கு. முத்துக்குமார்**

116. Ethnomedicinal Plants used by the Irula tribals of the Sirumugai, Western Ghats of Tamil Nadu, India 753
**H. Abdul Kaffor A. Venkatachalapathi, S. Jagathes Kumar and T. Baluprakash**

# 111. தூமனூர் கரட்டிகா குல இருளர்களின் வாழ்வியல் சடங்குகள்



முனைவர் ச. அரிச்சந்திரன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

உலகெங்கிலும் பரந்து வாழும் மனித சமுதாயத்தில் தொல்குடிகள், பூர்வகுடிகள், பழங்குடிகள் என அறியப்படும் இம்மக்களிடையே வளரும் இளைய சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டிய பண்பாட்டுக் கூறுகள் பல உள்ளன. நவீன யுகமாகக் கருதக் கூடிய இந்த நூற்றாண்டிலும் இயற்கையோடு இயைந்த வாழ்வினை ஏற்று மலைகளிலும், வனங்களிலும் ஆரவாரமும் பகட்டும் இல்லாமல் வாழ்ந்து வரும் இவர்களிடமிருந்துதான் பல பண்பாடுகள் தோன்றின என்றால் அது மிகையில்லை. இயற்கையின் குழந்தைகள் என அழைக்கப்படும் இப்பழங்குடிகளின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த பண்பாடுகள், கலாச்சராரம் ஆகியன ஆவணப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் மிக இன்றியமையாத தேவையாகும். ஏனெனில் வரலாற்று மீட்ருவாக்கத்திற்கும் இவர்கள் குறித்த தரவுகள் பெரிதும் பயன்படும் என்ற மானிடவியலார்களின் கருத்தை நினைவிற் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் 36 வகையான பழங்குடிகள் வாழ்ந்து வருவதாக மானிடவியல் மற்றும் பழங்குடிகள் குறித்து ஆய்வு மேற்க்கொண்ட ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குறிப்பாகக் கொங்கு மண்டலம் பழங்குடிகள் அதிகமாக வாழ்ந்து வரும் பகுதியாகும். மலையாளி, இருளர், தொதவர், கோத்தர், குறும்பர், பணியர், காட்டுநாயக்கர், முதுவர், காடர், புலையர், பளியர், ஊராளி, ஆகிய பழங்குடிகள் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்திலுள்ள பழங்குடியினர் எண்ணிக்கையில் முதலிடம் வகிப்பவர்கள் மலையாளிகள், அதனையடுத்து இருளர்கள். கொங்கு மண்டலத்தில் இவ்விரு பழங்குடிகளும் அதிகமாக வசித்து வருகின்றனர். கொங்கு மண்டலமாகிய கோயம்புத்தூரில் இருளர் பழங்குடி மக்கள் மருதமலை, வெள்ளியங்கிரி மலையடிவாரப் பகுதிகள் பாலமலை, அட்டுக்கல் மற்றும் 24 வீரபாண்டி பஞ்சாயத்திற்கு உட்பட்ட பதினெட்டு கிராமங்களில் அதிகம் வாழ்ந்து வருகின்றனர். இவற்றில் தூமனூர் [illegible] கிராமத்தில் மேற்கொண்ட களஆய்வின் அடிப்படையில் இம்மக்களின் சில வாழ்வில் சடங்குளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.